படிவம் (இலக்கம் 01)

பாராளுமன்ற அமர்வு இலக்கம் 114
நிறுவனத்தின் பெயர் : அமைச்சரவை அலுவலகம்

| குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடு | குறைபாட்டினைத் தவிர்ப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை |
|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படாமை | இந்த அலுவலகத்திற்காக ஒதுக்கப்படும் வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளின் அளவானது ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது மிக சிறிய அளவாக இருக்கின்றமை, வேறு அரசாங்க நிறுவனங்களைப் போன்று பல்வேறுபட்ட கருத்திட்டங்களோ அல்லது நிகழ்ச்சித் திட்டங்களோ இந்த அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப் படாமை போன்ற விடயங்கள் காரணமாக இந்த அலுவலகத்திற்கு மேலதிக செலவினை ஏற்று உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றைப் பேணும் கடும் தேவை இல்லாமை பற்றி பல சந்தர்ப்பங்களில் என்னால் கணக்காய்வு அதிகாரபீடத்திற்கு விடய முன்வைப்புகள் செய்யப்பட்ட போதிலும் இந்த விடயங்களுடன் கணக்காய்வு அதிகாரபீடமானது உடன்பாடமை காரணமாக இந்த அலுவலகம் சார்பில் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றை புதிதாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தப் பதவிக்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை முழுநேர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யும் வரை நிதி அமைச்சில் சேவை புரியும் உத்தியோகத்தர் ஒருவரை பதில் கடமையாற்றுவதற்காக நியமிப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டாலும் இந்த அலுவலகத்தில் தற்போது கிடைக்கக்கூடியதாகவுள்ள இடவசதியானது குறித்த உத்தியோகத்தருக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு போதுமானதாக இல்லாமையினால், இதுவரை உள்ளக கணக்காய்வாளருக்கான பணிகளை இந்த அலுவலகத்தில் மேற்கொள்வதற்கு இயலாமற் போயுள்ளதோடு, உரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் உரிய வகையில் நடாத்துவதற்கு முடியாமற் போயுள்ளமை பற்றியும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த அலுவலகம் இடவசதியுடன் கூடிய வேறு இடமொன்றில் தாபிக்கப்பட்டதன் பின்னர் இந்த உத்தியோகத்தருக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| பொருள் கணக்கெடுப்பு பணிகள் | 2017 ஆம் ஆண்டிற்குரிய பொருள் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு பொருள் கணக்கெடுப்புச் சபையானது உரிய முறையில் நியமிக்கப்பட்டிருந்ததோடு, கணக்காய்வுத் திகதியன்றுக்கு இந்த சபை அதன் அறிக்கையின் இறுதிக் கட்ட நடவடிக்கைகளை செய்து கொண்டிருந்தது. தயாரிக்கப்பட்ட அறிக்கையானது 2018-05-03 ஆம் திகதியன்று கணக்காய்வாளர் அதிபதிக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. உடைந்த / பயன்படுத்த முடியாத பொருட்களை நீக்குவது சம்பந்தமான அறிக்கை 2018-08-08 ஆம் திகதியன்று கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| எல்லைகளை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளமை | 2017 திசெம்பர் மாதத்திற்குரியதாக இருப்பினும் கொடுப்பனவுகளுக்குரிய ஆவணங்கள் 2017 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுக்கு கிடைக்கப் பெற்றிருக்காமையினால் பின்வரும் அத்தியாவசியமாக செய்யப்படவேண்டிய செலவுகள் சார்பில் 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. 1003 (பிற கொடுப்பனவுகள்) எனும் செலவு விடயத்தின் கீழ் ரூபா 231,019.69, 1101 (உள்நாட்டு பிரயாணச் செலவு) என்னும் செலவு விடயத்தின் கீழ் ரூபா 4,932.75 மற்றும் 1402 (அஞ்சல் மற்றும் தொடர்பாடல்) என்னும் செலவு விடயத்தின் கீழ் ரூபா 29,220.16 என்னும் அடிப்படையில் பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |

எஸ்.அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்

S. ABEYSINGHE
Secretary to the Cabinet,
Office of the Cabinet of Ministers,
Republic Square,
Sir Baron Jayathilake Mawatha
Colombo 01.